செ.வெ. எண்: 1030 23.11.2010.

பொதுத் (தேர்தல்கள்–1) துறை

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 2011–இல், பெறப்பட்ட விண்ணப்பங்களை கணினியில் பதிவு செய்தல் மற்றும் புகைப்படங்களை ஸ்கேன் செய்தல் ஆகிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கணினியில் விவரப் பதிவு மற்றும் புகைப்பட ஸ்கேன் வேலைகள் முடிந்தபிறகு, கள விசாரணைக்காக வாக்குச் சாவடி நிலை அலுவலர்களிடம் படிவங்கள் கொடுக்கப்படுகின்றன. படிவங்களில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளுக்குச் சென்று வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் சரிபார்ப்புப் பணிகளை மேற்கொள்கின்றனர். இந்த வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது விண்ணப்பங்களை அளித்த பொதுமக்கள் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அந்தந்தப் பகுதிக்குரிய வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் குறித்த விவரங்களை மாவட்ட தேர்தல் அலுவலரிடமிருந்தோ அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளிடமிருந்தோ (பொதுவாக வருவாய்க் கோட்டாட்சியர்கள் / மாநகராட்சிப் பகுதிகளில் மண்டல அலுவலர்கள் / நகராட்சி ஆணையர்கள் / வட்டாட்சியர்கள்) அறிந்துகொள்ளலாம். இவ்விவரங்களை http://elections.tn.gov.in அல்லது http://ceotamilnadu.nic.in என்ற வலைதளங்களிலும் காணலாம். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமிக்கப்பட்ட வாக்குச் சாவடி நிலை முகவர்களும் இந்நடவடிக்கைகளின்போது வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு உதவலாம்.

2. சரிபார்ப்புப் பணிகள் முடிவுற்றபின்னர், ஒவ்வொரு விண்ணப்பத்தின் மீதான இறுதி ஆணைகள் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்படும். இதன் பின்னர் 2011 ஜனவரி மாதம் 5–ஆம் தேதி இறுதிப்பட்டியல்கள் வெளியிடப்படும். இறுதிப் பட்டியல்கள் வெளியிடப்பட்டபின்னர், வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது அளிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்தின் நிலை குறித்தும்

அந்தந்த விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெயர் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய பெயர் இடம்பெற்றுள்ள பாகத்தின் எண்ணும் வரிசை எண்ணும், பெயர் சேர்க்கப்படாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய பெயர் சேர்க்கப்படவில்லை என்றும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணமும் தெரிவிக்கப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

P.R. No: 1030

23.11.2010.

**Public (Elections.I) Department**

**Press Release**

As part of the Summary Revision of Electoral Rolls, 2011, the data entry and scanning of photographs is presently going on. After the data entry and scanning, the forms are given to Booth Level Officers (BLOs) for verification in the field. The BLOs go to the addresses given by persons in the forms for verification. People who have given application during the revision are requested to cooperate with the BLOs. The list of the BLOs of their area can be ascertained from the District Collectors or the Electoral Registration Officers/Assistant Electoral Registration Officers (generally Revenue Divisional Officers / Zonal Officers in Corporation areas / Municipal Commissioners / Tahsildars). This is also available at the website of http://elections.tn.gov.in or http://ceotamilnadu.nic.in. During the process, the Booth Level Agents appointed by the recognized political parties can also assist the BLOs.

2. After verification, final orders on each application will be passed by the ERO. Final publication of the Rolls will take place on January, 5, 2011. After the final publication, arrangements have been made to inform each applicant on the status of each application given during revision. Each applicant would be informed whether his name has been included with the Part No. and serial no. of inclusion or whether his name has been rejected with reasons for rejection.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

Chief Electoral Officer,
Tamil Nadu